# DEPOSITION OF WITNESS

**Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of Judicial Magistrate No. II, Usilampatti**

**CC 40/2018**

**Deposition of Wit/ness for PW6**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | வீரபாண்டி | Caste | : | |
| Father/Husband Name | : | குழந்தைவேல் | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

**( Accused present)**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1969 of the day of 12.03.2026**

**முதல் விசாரணை**

நான் காவல் துறையில் சார்பு ஆய்வாளராகப் பணிபுரிந்து தற்போது ஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 06.08.2017ம் தேதி 14.30 மணிக்கு வாலாந்துார் காவ்ல நிலையத்தில் சார்பு ஆய்வாளராகப் பொறுப்பில் இருந்த போது குறவகுடி கிராமத்தை சேர்ந்த நல்லகண்ணன் மனைவி பேச்சி என்பவர் நிலையம் ஆஜராகி எழுத்துமூலமாக கொடுத்த புகாரை பெற்று வாலந்துார் காவல் நிலைய குற்ற எண் 171/2017 பிரிவுகள் 294(b), 447,323,506(ii) r/w 4 of TNPHW Act படி என்று வழக்கு பதிவு செய்தேன். ப அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.பின்னர் அந்த முதல் தகவல் அறிக்கையின் அசலை நீதிமன்றத்தில் ஒப்படைத்தேன். பின்னர் 06.08.2017ம் தேதி 15.30 மணிக்கு சம்பவ இடத்தை பார்வையிட்டு சாட்சிகள் முத்தமிழன், ஜெகன்ஆகியோர்கள் முன்னிலையில் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். அவைகள் முறையே **(அ.சா.ஆ. 4 மற்றும் 5)**

ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் சாட்சிகள் பேச்சி, நல்லகண்ணன், உக்கிரபாண்டி, பாண்டியம்மாள் ஆகியோர்களைளயும், மகசர் சாட்சிகளையும் தனித்தனியே விசாரணை செய்து, வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். எதிரியை 07.08.2017ம் தேதி காலை 8.30 மணிக்கு குறவகுடி சாவடி அருகே காரணம் கூறி கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். இறுதியாக சம்பவம் உண்மையென தெரியவந்ததால், எதிரிகளின் மீது மேற்சொன்ன பிரிவுகளின் கீழ் இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :**

புகாரில் அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர் இந்துராணி நாகரத்தினம் தோட்டத்தில் வேலை பார்த்து வருவதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதை போல் எதிரிக்கும் இந்துராணி நாகரத்தினம் ஆகியோருக்கும் இடசம்பந்தமாக பிரச்சனை இருந்து வருகிறது என்றால் சரிதான். எதிரியும் அவருடன் சேர்ந்த ஆட்களும் மேற்படி இந்திராணி தோட்டத்தில் குடிசை போட்டது சம்பந்தமாக பிரச்சனை ஏற்பட்டது என்று எனது விசாரணையில் துலங்கியது என்றால் சரிதான். எதிரியின் மகன்கள் இருவரும் சம்பவத்தில்ஈடுபட்டதாக புகாரிலோ விசாரணையிலோ சொல்லப்படவில்லை என்றால் சரிதான். அ.சா.1 மற்றும் அ.சா.2 இடம் சென்று எதிரி பணம் தருகிறேன் வேலையைவிட்டு சென்றுவிடு என்று சொன்னதாக விசாரணையில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். இந்த தோட்டத்தில் வேலை செய்தால் உன்னை கொன்றுவிடுவேன் என்று எதிரி மிரட்டியதாக சொல்லப்படவில்லை என்றால் சரிதான். அ.சா.1 மற்றும் அ.சா.2 இரண்டு நபர்களும் இந்துராணி நாகரத்தினம் தோட்டத்தில் வேலை செய்வதால் இந்திராணிக்கு ஆதரவாகவும் எதிரிக்கு எதிராகவும் பொய் புகார் கொடுத்தார்கள் என்றால்

சரியல்ல. மேற்படி பொய் புகாரை சரிவர விசாரணை செய்யாமல் பொய் வழக்கு பதிவு செய்து சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல் ஆவணங்களை காவல்நிலையத்தில்வைத்து தயார் செய்தேன் என்றால் சரியல்ல. அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்ததாக எந்த ஆவணமும் இல்லை என்றால் சரிதான். இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.